# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



201

## நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்

## முன்னிலை: திரு.M.ஸ்ரீதர், B.E., M.Plan.,

ந.க.எண்.1981/2019/விம

நாள்:15.07.2020

பொருள்: மனைப்பிரிவு – நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் – விழுப்புரம் மண்டலம் – விழுப்புரம் மாவட்டம் – வானூர் வட்டம் – வானூர் ஊராட்சி ஒன்றியம் – திருச்சிற்றம்பலம் கிராமம் – ச.எண்கள்.1/1, 1/2A, 2/4, 5/1A–ஆகியவற்றில் 4.36 ஏக்கர் (அ) 17650.00 ச.மீ பரப்பளவில் அமையவுள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:

1) மனுதாரர் திருமதி. R. பச்சையம்மாள், திருச்சிற்றம்பலம் அவர்களின் விண்ணப்பம் நாள்:16.10.2019 (Online Application No.201905301010236/ dt.21.01.2019
2) அரசாணை எண் 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (M.A 1) நாள் 04.02.2019.
3) அரசாணை எண்.71, ஊரக வளர்ச்சித்துறை, நாள் 16.06.2003.
4) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.7978/2012/LA2, நாள்19.04.2012 மற்றும் 24.05.2012.
5) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.14619/1988/பிசிசி, நாள் 27.04.1988.
6) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.40483/2000/எல் ஏ2, நாள்: 07.11.2002.
7) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.16985/2000/எல்ஏ2, நாள் 29.09.2007.
8) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.12544/2014/சிபி, நாள் 04.07.2014.
9) அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [UD4(3)] துறை நாள்:04.05.2017
10) மனுதாரர் வட்டார வளர்ச்சி அலுவலர், வானூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடிதம் ந.க.எண்.ஆ2/1971/2018 நாள்:05.03.2020
11) இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள்:29.06.2020 (நன்னிலை வரி செலுத்தக் கோரியது)
12) மனுதாரர் நன்னிலை வரி செலுத்தி விபரம் பெறப்பட்ட நாள்:02.07.2020

----

உத்திரவு:

விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், வானூர் ஊராட்சி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் கிராமம், ச.எண்கள்.1/1, 1/2A, 2/4, 5/1A–ஆகியவற்றில் 4.36 ஏக்கர் (அ) 17650.00 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் மனைப்பிரிவு ஒப்புதல் கோரி பார்வை 1–ல் காணும் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

மனைப்பிரிவில் அமையும் உத்தேச மனைப்பிரிவு சாலையினை பார்வை (2)ல் கண்டுள்ள அரசாணையின்படி மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடத்தில் (0.50%) பொது ஒதுக்கீடு 'A' என குறிப்பிட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தினை வானூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு தானப்பத்திரம் எண்.979/2020 நாள்: 20.02.2020 மற்றும் தானப்பத்திரம் எண்.2115/2020 நாள்: 10.06.2020-ன்படி ஒப்படைப்பு செய்து அதற்கான விபரம் பெறப்பட்டுள்ளது.

மேலும், பார்வை (2)ல் கண்டுள்ள அரசாணையின்படி மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடத்தில் (0.50%) 'B' (TANGEDCO) என குறிப்பிட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தினை வானூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு தானப்பத்திரம் எண்.978/2020 நாள்: 20.02.2020-ன் படி ஒப்படைப்பு செய்து அதற்கான விபரம் பெறப்பட்டுள்ளது.

பார்வை (11)ல் காணும் இவ்வலுவலக கடிதம் மூலம் உத்தேச மனைப்பிரிவு ஒப்புதல் குறித்து அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய நன்னிலை வரி கட்டணம் செலுத்த கோரப்பட்டு பார்வை (12)ல் காணும் மனுதாரர் கடிதத்தில் நன்னிலை வரி கட்டணமாக ரூ.28,500/-(ரூபாய் இருபத்து எட்டாயிரத்து ஐநூறு மட்டும்) SBI, விழுப்புரம் கிளையில் 29.06.2020 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

மனுதாரர் கொடி நாள் நிதிக்காக ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)in favour of Armed Force Flag day fund, Villupuram என்ற பெயரில் வரைவோலையின் (Demand Draft No.416330 அசல் நாள்:24.06.2020 மற்றும் மனுதாரர் பெயரில் ரூ.10,000/- ரூபாய் ஐயாயிரம் மட்டும்)-க்கு சிறுசேமிப்பு பத்திரம் நாள்:23.06.2020-ன் நகல் பெறப்பட்டுள்ளது.

இம்மனைப்பிரிவிற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ந.ஊ.உ.இ(விம)எண்.**31/2020** என எண்ணிடப்பட்டு இரண்டு தொகுப்புகள் இத்துடன் இணைத்து மேல் நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

மேலும், பார்வை (5) மற்றும் (6)ல் சுட்டியுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதங்களில் தெரிவித்துள்ளபடி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பார்வை (3)ல் காணும் அரசாணையின்படி இதர நடைமுறைகளை பின்பற்றியும் மன்றத்தின் அனுமதி பெற்றும் இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனை எண்.19(இ),(உ)குறித்து உறுதி செய்த பின்னரே உள்ளாட்சி மன்றம் ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

பார்வை (9)ல் காணும் அரசாணையில் குறிப்பிட்டுள்ள விதி எண்.3-ன்படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/- மற்றும் விதி எண்.9-ன்படி அனுமதி கோரும் இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நில பயன் மாற்றக் கட்டணமாக கீழ் காணும் அரசுக் கணக்குத் தலைப்பின் கீழ் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

பார்வை (2)ல்
(0.50%)
வானூர்
மற்றும்
த்து

## Head of Account: (Land use Conversion Charge)

0217 Urban Development – 60
Other Urban Development Schemes 800
Other Receipts-AS Receipts Under
Land use conversion charges -27
Non Taxation fees – 09 collections.
**DPC: 0217-60-800-AS – 2790**

மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது, மனைப்பிரிவு நிபந்தனை எண்.19(ஈ)–ன்படி, அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

The Land Ownership is the responsibility of the local Authority, as per the G.O.Ms.No.71, RDLA dated 16.06.2003 & G.O.No.134,M.A.WS, dated 20.09.2002 and this technical approval for the layout is accorded based on the land ownership certificate furnished by the executive authority.

EWS மனைகள் பொருளாதாரத்தால் பின் தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மேற்படி மனைகளை (மனை எண்கள். 6 முதல் 10 வரை, 38 முதல் 42 வரை, 60 முதல் 69 வரை மற்றும் 74 முதல் 83 வரை) மனை உட்பிரிவு/மனை ஒருங்கிணைப்பு/மனை உபயோக மாற்றம் செய்யக்கூடாது.

பார்வை (10)ல் காணும் ஊராட்சி ஒன்றிய கடிதம் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பூங்கா இடத்தினை தனி புல உட்பிரிவு பெற ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

## அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்

விழுக்காடு

| ஒதுக்கீடு விபரம் | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு: | 4.36 ஏக்கர் (அ) 17650.00 ச.மீ | |
| கோரிய மனைகள்: | 100 | |
| ஒதுக்கிய மனைகள்: | 94 [இவற்றில் எளியோர் வாழும் குடியிருப்பு மனைகள் (Economically Weaker Section Plots) மனை எண்கள். 6 முதல் 10 வரை, 38 முதல் 42 வரை, 60 முதல் 69 வரை மற்றும் 74 முதல் 83 வரை) | |
| மனுதாரர் விற்பனைக்குரியது | | |
| கடை | 199.00 ச.மீ | ---1.07% |

பொது ஒதுக்கீடுகள் உள்ளாட்சிக்கு தானமாக மனுதாரரால் ஒப்படைப்பு செய்யப்பட்டவை

| | | |
|---|---|---|
| பூங்கா | 1326.00 ச.மீ | ---10.10% |
| (மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு நீங்கலாக) | | |
| A | 65.50 ச.மீ | ---0.50% |
| B (TANGEDCO) | 65.50 சமீ | ---0.50% |

சிறப்பு நிபந்தனைகள்:

1) பார்வை 8—ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்ட சிறப்பு நிபந்தனையின்படி "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பத்தாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பத்தாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பத்தாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமை தனியாக உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல."

2) உத்தேச மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலைகள் உள்ளாட்சியால் தெரிவிக்கப்படும் சாலையின் அகலம், அதன் உயரம் மற்றும் தரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளதா என்பதை செயல் அலுவலர் அவர்களால் ஆய்வு செய்து சாலையின் நிலை குறித்து தகுதிச் சான்று பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

3) மனுதாரரால் தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகள், பூங்கா மற்றும் திறவிடம் பகுதியினை உட்பிரிவு செய்து உள்ளாட்சியின் சொத்து கணக்கில் பதிவு செய்யப்பட்டதன் விவரத்தினை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் உறுதி செய்து கொள்ள வேண்டும். இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளை மனுதாரர் மற்றும் உள்ளாட்சி கடைபிடிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

4) மனைகள் மற்றும் சாலைகள் அங்கீகரிக்கப்பட்டு ம.வ/ந.ஊ.உ.இ(விம) எண். 31/2020 எண்ணிடப்பட்டுள்ள வரைபடத்தின்படி எல்லைக்கற்களால் வரையறுக்கப்பட வேண்டும்.

வானூர் ஊராட்சி ஒன்றியத்தால் இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திர பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும், உரிய நடவடிக்கைக்கும் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

உத்தேச மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம், மனைப்பிரிவு வரைபடங்கள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவை இரண்டு தொகுப்புகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மனுதாரர் மேற்கொண்டு வட்டார வளர்ச்சி அலுவலர், வானூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேலும், உத்தேச மனைப்பிரிவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்திரவு கடிதம் வரைபடங்கள் மற்றும் நிபந்தனைகள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகைச் சான்றும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட்ட ஆணையின் நகலையும் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு வட்டார வளர்ச்சி அலுவலர், வானூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு
ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்
மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் –2 தொகுப்பு

15/7/2020

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
விழுப்புரம் மண்டலம்,
விழுப்புரம்.
15/7/2020

பெறுநர்:
1) வட்டார வளர்ச்சி அலுவலர்,
வானூர் ஊராட்சி ஒன்றியம்,
வானூர் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்.

2) சார்பதிவாளர்,
வானூர் சார்பதிவாளர் அலுவலகம்,
வானூர் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்.

நகல்:
திருமதி. R. பச்சையம்மாள்,
க/பெ. ரங்கநாதன்,
எண்.2/221, மயிலம் ரோடு,
திருச்சிற்றம்பலம் கூட்டு ரோடு,
வானூர் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்.

2

தமிழ் நாடு அரசு

நகர் ஊரமைப்புத் துறை, விழுப்புரம் மண்டலம்

கோப்பு எண்.1981/2019/விம,
ம.வ/ந.ஊ.உ.இ (விம) எண31/2020

விழுப்புரம் மாவட்டம்,
வானூர் வட்டம்,
வானூர் ஊராட்சி ஒன்றியம்,
திருச்சிற்றம்பலம் கிராமம்

மனைப்பிரிவு நிபந்தனைகள்

1) அ) மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்ட ம.வ/ந.ஊ.உ.இ.(விம) எண்.31/2020 என எண்ணிடப்பட்ட வரைபடத்தின்படி எல்லைக்கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். மனைப்பிரிவுக்குள் வரும் தெருக்கள் அனைத்தும் தமிழ்நாடு மாவட்ட ஊராட்சி கட்டிட விதிகள் 3(5)—ன்படி ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளுக்கேற்ப அமைக்கப்பட வேண்டும்.

ஆ) அத்தோடு தேவையான பாலங்கள், சாக்கடை வடிகால், துப்புரவு வசதி, தெரு விளக்கு ஆகிய வசதிகளை வட்டார வளர்ச்சி அலுவலர் கருத்திற்கொப்ப மனுதாரர் அமைத்து தர வேண்டும்.

இ) நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

ஈ) அங்கீகரிக்கப்பட்ட இம்மனைப்பிரிவில் உத்தேசிக்கப்பட்டுள்ள சாலைகளை மனைப்பிரிவு விண்ணப்பத்தாரர் / மனுதாரர் முறையாக அமைத்து அல்லது அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தி சம்பந்தப்பட்ட ஊராட்சிக்கு உரிய படிவத்தில் பதிவு செய்து பொதுச் சாலையாக பராமரிக்க வட்டார வளர்ச்சி அலுவலருக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டும்.

உ) மேற்படி சாலைகளை பொதுச்சாலையாக சர்வே காலங்களில் வரையறை செய்வதற்கான உட்பிரிவு தொகையையும் ஊராட்சி ஒன்றிய அலுவலருக்கு செலுத்தல் வேண்டும்.

2) இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு மூலை முடக்கு (Splay) அமைக்கப்பட வேண்டும்.

3) மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது.

4) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்ட வேண்டும். இதில் கடை, பண்டகச் சாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது. பொது வசதிகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ள உபயோகங்களுக்காக மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும். அந்த இடங்களை ஒதுக்கப்பட்ட உபயோகத்திற்காக நில அளவு ஆவணங்களில் உட்பிரிவு செய்துள்ள கொள்ள வேண்டும்.

12)

5) விரிவு அபிவிருத்தித் திட்டப்பகுதிக்குள் அமையும் மனைப்பிரிவு எனில், திட்ட விதிகளின்படி தனித்தொரு குடியிருப்பு மனையில் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும். ஒரு பக்கம் இணைந்த வீடுகள் அனுமதிக்கப்பட்ட மனையில் ஒரு பக்கம் இணைந்த வீடுகளே கட்டப்பட வேண்டும். இதற்கு மாறாக எக்காலத்திலும் தனிப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவினையோ அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையையும் பயன்படுத்தக் கூடாது.

6) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு வரைபடத்தில் காட்டியுள்ளவாறு கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். மனைப்பிரிவில் அமையும் 7.0 மீட்டர் (23 அடி) சாலைக்கு 1.5 மீட்டரும் (5 அடி), 9.0 மீட்டர் (30 அடி) அகலம் வரையிலான சாலைக்கு 3.0 மீட்டரும் (10 அடி) 12 மீட்டருக்கு (40 அடிக்கு) மேல் மற்றும் 15.0 மீட்டர் (50 அடி) அகலத்திற்குட்பட்ட சாலைகளுக்கு 3.0 மீட்டர் (10 அடியும்), 15.0 மீட்டர் (50 அடி) அகலத்திற்கும் மேலும் 21.0மீ (70 அடி) அகலத்திற்குட்பட்ட சாலைகளுக்கு 4.5 மீட்டர் (15'0") அடியும் 21.0 மீட்டர் (70 அடி) மேல் 24.0 மீட்டரும் (80 அடி) அகலம் அதற்கு மேற்பட்ட அகலம் கொண்ட சாலைகளுக்கு 6.0 மீட்டர் (20 அடி) என்ற அளவில் கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். ஊராட்சி கட்டிட விதிகளின்படி மனையின் எல்லைக்கும் கட்டிட வரம்பிற்கும் உட்பட்ட நிலப்பகுதியில் தெருவின் உயர் மட்டத்திலிருந்து 1.8 மீட்டர் (6 அடி) மாவட்ட நகராட்சிகள் கட்டிட விதிகளின்படி 2.4 மீட்டர் (8.0அடி) உயரத்திற்கும் மேற்படாத சுற்றுச்சுவர் அல்லது வேலி தவிர வேறு எந்தவித கட்டிடமோ சுவரோ கட்டுதல் கூடாது.

7) மனையின் பக்க எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் ஒவ்வொர பக்கத்திலும் குறைத்தது 1.5 மீட்டர் அளவுள்ள திறந்த வெளி அல்லது ஒரு பக்கம் மட்டும் குறைந்தது 3 மீட்டர் திறவெளி விடப்பட வேண்டும். 10 மீட்டர் வரை மனையின் அகலம உடைய மனைகளுக்கு பக்கத்திறவெளி ஒரு பக்கத்திலாவது குறைந்தது 1.5 மீட்டர் விடப்பட வேண்டும்.

8) ஒவ்வொரு மனையின் பின்புற எல்லைக்கும் கட்டடத்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 3 மீட்டர் / 2 மீட்டர் அளவுள்ள திறந்த வெளி இருத்தல் வேண்டும். இந்த பின்பக்கத் திறந்த வெளியில் கிணறு, கழிப்பறை, எருக்குழி, மாட்டுத் தொழுவம், உந்து வண்டி நிறுத்தும் கொட்டகை போன்றவை அல்லது அவை போன்ற குடியிருப்பு அல்லாத ஆனால் அதைச் சார்ந்த கட்டடங்கள் மட்டுமே அமைக்கப்படலாம். ஆனால் கட்டடங்கள் மொத்தமாக பின்பக்க எல்லையின்

நீளத்தில் மூன்றில் ஒரு பாகத்திற்கும் மேற்படாமலும் மனையின் பின்பக்க நில மட்டத்திலிருந்து 3.00 மீட்டர்/ 3.75 மீட்டர் உயரத்திற்கும் மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

9) விரிவு அபிவிருத்தி திட்டப்பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில், திட்ட விதிகளின்படி மனையின் பரப்பில் 50 அல்லது 67 விழுக்காட்டிற்கு மேல் கட்டடம் கட்டப்படக் கூடாது. கட்டடம் கட்டாமல் விடப்படும் திறந்த வெளியினை தோட்டமாகவோ, திறந்த முற்றமாகவோ தனிப்பட்ட பயன்பாட்டிற்காகவோ துப்புரவாக பராமரித்தல் வேண்டும்.

10) மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

11) கடைக்கால் (Foundation) போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமன்படுத்தவோ, நிலச்சரிவை சீர் செய்யவோ, மனையிலிருந்து மண் தோண்டி எடுத்துப்பள்ளங்கள், குழிகள் ஏற்படுத்துதலோ கூடாது.

9 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் அமைக்கப்பட வேண்டும்.

13) மனுதாரர், மனைப்பிரிவுத் தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய அலுவலரிடமிருந்து ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் உள்ளாட்சியிலிருந்து அனுமதி பெற வேண்டும்.

14) மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்கான அல்லது கடைகளுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.

15) கோவில் தேவாலயம், பகுதி ஆகிவற்றிற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடம் / இடங்கள் வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்துக்கொள்ள வேண்டும். இவைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

16) பூங்கா, சிறுவர் விளையாடுமிடம், திறவிடம் போன்றவைகளுக்காக ஒதுக்கப்பட்ட மனைகளை வட்டாட்சியர் அலுவலகத்தில் உட்பிரிவு செய்து உள்ளாட்சியிடம், உள்ளாட்சி அங்கீகாரம் வழங்கும் முன் தானமாக ஒப்படைக்க வேண்டும். இதனை உள்ளாட்சி அமைப்பு தவறாது கடைப்பிடிக்க வேண்டும். இத்தகைய நிலங்களை மனைப்பிரிவு ஒப்புதல் பெறும் நபரோ அல்லது வேறு நபர்களோ விற்பனை செய்ய முயற்சித்தாலோ அல்லது விற்பனை செய்தாலோ அவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை தொடரப்படுவதோடு நிலத்தை பறிமுதல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

17) மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின்கம்பி பாதை / தந்தி கம்பிப் பாதை அமைந்தால் கம்பிப்பாதையை சாலையில் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.

18) மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி நிபந்தனைக்குட்படுவதாக எழுத்து மூலமாக ஊராட்சி ஒன்றிய அலுவலருடன் (Executive Authority) ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைப்பிரிவு நிபந்தனைகளை தொடர்புடைய சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். மனைகள் விற்கப்படுவதும் அல்லது குத்தகைக்கு விடப்படுவதும் மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டுத்தான் செய்யப்பட வேண்டும். மனைகள் விற்பவரையும், வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி நிபந்தனைகளை விற்பனைப் பத்திரங்களின் பகுதியாகச் சேர்க்கப்பட வேண்டும்.

19) அ) மேற்படி மனைப்பிரிவிற்குத நகர் ஊரமைப்புத்துறையால் தொழில் நுட்ப ஒப்புதல் (Technical Approval ) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ) தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் 1978 நடைமுறையில் உள்ள இடத்தில் மனைப்பிரிவு அமைந்தால், மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட விபரத்தினை தொடர்புடைய உச்சவரம்புச் சட்ட அதிகாரிக்குத் தெரிவித்தல் வேண்டும்.

இ) மனைப்பிரிவு இடம் 1894–ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டப்பிரிவு 4 (1)–ன்படி பிரகடனம் செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றி பரிசீலணை செய்த பின்னரும் நில உச்சவரம்பு சட்டம் 1978 மற்றும் நிலச் சீர்த்திருத்தச் சட்டம் 1961 தொடர்பான விதிமுறைகளை நிறைவு செய்வதற்கான மண நிறைவு அடைந்த பின்னரே தான் ஊராட்சி ஒன்றிய அலுவலர் (Executive Authority) மனைப்பிரிவுக்கு ஊராட்சி ஒன்றியத்தால் ஒப்புதலளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஈ) மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும் போது ஊராட்சி ஒன்றிய அலுவலர் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும்.

உ) மேலும், மேற்படி சட்டங்களின்படி நில ஆர்ஜிதம் சம்பந்தமாக நில ஆர்ஜிதப்பட்டியல் (Land Plan Schedule) எதுவும் பரிசீலனைக்குப் பெறப்படவில்லை என்பதையும் மனநிறைவு அடைந்த பின்னரே மனைப்பிரிவிற்கு ஊராட்சி ஒன்றிய அலுவலர் ஒப்புதல் அளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

20) மனுதாரர், வானூர் ஊராட்சி ஒன்றிய அலுவலரிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் இடத்தில் அறிவிப்பு பலகை மூலம் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மானம் எண்ணும் நாளும் மற்றும் மன்றத்திற்கும் மனுதாரருக்கும் ஒப்பந்தமான எண்ணும் நாளும் தெளிவாக குறிப்பிட்டு அறிவுப்பு செய்யப்பட வேண்டும்.

21) மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

22) நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களால் இரத்து செய்யப்படும்.

23) நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைகள் வாங்கும் ஒவ்வொரு மனுதாரருக்கும் மனைப்பிரிவு வரைபடம் நகல் கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

24) ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் எவ்வித மாற்றம் இன்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 5'x5' அளவிற்கு குறையாமல் கான்கிரீட் பலகையில் பொது மக்கள் பார்வைக்கு வரைந்து வைக்கப்பட வேண்டும்.

25) EWS மனைகள் பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் இம்மனைகளை ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது.

26) "This order is passed subject to the outcome of the writ petition WP(MD) No.8948 of 2019'

கையகப்படுத்துதஃ
...ள்ளதா என்பது பற்றி
...ட்டம் 1978 மற்றும்
...றைகளை நிறைவு
...ாட்சி ஒன்றிய
...ன்றியத்தால்
...கிறது.
...ம்

# அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்

| ஒதுக்கீடு விபரம் | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு: | 4.36 ஏக்கர் (அ) 17650.00 ச.மீ | |
| கோரிய மனைகள்: | 100 | |
| ஒதுக்கிய மனைகள்: | 94<br>[இவற்றில் எளியோர் வாழும் குடியிருப்பு மனைகள் (Economically Weaker Section Plots) மனை எண்கள். 6 முதல் 10 வரை, 38 முதல் 42 வரை, 60 முதல் 69 வரை மற்றும் 74 முதல் 83 வரை) | |
| **மனுதாரர் விற்பனைக்குரியது** | | |
| கடை | 199.00 ச.மீ | ---1.07% |
| **பொது ஒதுக்கீடுகள் உள்ளாட்சிக்கு தானமாக மனுதாரரால் ஒப்படைப்பு செய்யப்பட்டவை** | | |
| பூங்கா | 1326.00 ச.மீ<br>(மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு நீங்கலாக) | ---10.10% |
| A | 65.50 ச.மீ | ---0.50% |
| B (TANGEDCO) | 65.50 சமீ | ---0.50% |

15/7/2020

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
விழுப்புரம் மண்டலம்,
விழுப்புரம்.

15/7/2020

# வானூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின் நடவடிக்கைகள்

## முன்னிலை : திரு.A.ராமதாஸ்.B.com.,MA.,

ந.க.எண் ஆ2/ 1971/2018

நாள்: 06.08.2020

பொருள் : மனை உட்பிரிவு ஒப்புதல் – வானூர் ஊராட்சி ஒன்றியம் – திருச்சிற்றம்பலம் கிராமம் – சர்வே எண்கள். 1/1, 1/2A, 2/4, 5/1A—ஆகியவற்றில் 4.36 ஏக்கர் (அ) 17650.00 ச.மீ பரப்பளவில் அமைந்துள்ள – மனை உட்பிரிவு ஒப்புதல் வழங்கி உத்திரவிடுதல் – சார்பு.

பார்வை :

1. அரசாணை எண் 79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்[UD(3)] துறை நாள்: 04.05.2017.
2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம், விழுப்புரம் அவர்களின் ந.க.1981/2019/விம, நாள்:15.07.2020.
3. துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஆய்வு அறிக்கை நாள்: 27.07.2020.
4. சார்பதிவாளர், வானூர் கடிதம் எண். 147/2020 நாள்: 28.07.2020
5. **SBI**, வானூர் வங்கி கருவூல செலுத்துச் சீட்டு நாள்:29.07.2020.
6. **Corporation Bank** , Puducherry நாள்:29.07.2020.

-----

**உத்தரவு :**

வானூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த திருச்சிற்றம்பலம் கிராமம் சர்வே எண்கள். 1/1, 1/2A, 2/4, 5/1A—ஆகியவற்றில் 4.36 ஏக்கர் (அ) 17650.00 ச.மீ அமைந்துள்ள இடத்தை மனை உட்பிரிவு செய்து வரன்முறைப்படுத்திட, பார்வை 1—ல் காணும் அரசாணையில் தெரிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி, பார்வை 2—ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் நடவடிக்கையின் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 3—ல் காணும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மேற்படி மனையை ஸ்தல ஆய்வு செய்து மனை உட்பிரிவு மற்றும் வரன்முறைப்படுத்த அனுமதி வழங்கலாம் என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

பார்வை 4—ல் காணும் சார்பதிவாளர் அவர்களின் கடிதப்படி சந்தை வழிகாட்டி மதிப்பீட்டின்படி புன்செய் வகைப்பாட்டில் இருந்த மனையாக மாற்ற அனுமதி கோரும் இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகை நில பயன்மாற்ற கட்டணம் பார்வை 5—ன்படி உரிய அரசு தலைப்பில் கீழ்கண்டவாறு செலுத்தப்பட்டுள்ளது.

அரசுத்தலைப்பு

021760800AS2790

| வ. எண் | விஸ்தீரணம் | சார்பதிவாளர் சந்தை மொத்த மதிப்பு | 3% நிலமாற்று கட்டணம் |
|---|---|---|---|
| 1 | 2.96 ஏக்கர் (அ) 11983 ச.மீ (1 செண்டு வீதம் ரூ.4690) | 1388240 | 41647 |
| 2 | 1.40 ஏக்கர் (அ) 5667 ச.மீ (1 செண்டு வீதம் ரூ.3350) | 469000 | 14070 |
| மொத்தம் | | 1857240 | 55717 @ 55720 |

ரூ.55,720/— (ரூபாய் ஐம்பத்து ஐந்தாயிரத்து எழுநூற்று இருபது மட்டும்)

எனவே, பார்வை 1—ல் காணும் அரசாணை மற்றும் பார்வை 3—ல் காணும் நடவடிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, மேற்படி திருச்சிற்றம்பலம் கிராமம் சர்வே எண்கள். 1/1, 1/2A, 2/4, 5/1A—ஆகியவற்றில் 4.36 ஏக்கர் (அ) 17650.00 ச.மீ பரப்பளவில் அமைந்துள்ள இடத்தில் 1 முதல் 94 மனைகளாக அனுமதியாக்கப்பட்டு இதில் மனை எண். 91க்கும் 92க்கும் இடையில் மனை எண்ணிடப்படாமல் 199.00 சதுரமீட்டர் கடைக்கு ஒதுக்கி விற்கும் உரிமையுள்ள மனை உரிமையாளருக்கு வழங்கப்படுகிறது. மேலும் பொருளாதாரத்தில் நளிவுற்ற பிரிவினர்களுக்கு மனை எண் 6 முதல் 10 வரை, 38 முதல் 42 வரை மற்றும் 60 முதல் 69 வரை மற்றும் 74 முதல் 83 வரை ஆக மொத்தம் 30 மனைகள் (EWS-க்கும்) ஒதுக்கியும் மனையை உட்பிரிவு ஒப்புதல் வழங்கி இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

“நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனை உட்பிரிவு ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின்,மனை உட்பிரிவிற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.”

A. Balu[illegible] 06.8.2020

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
ஊராட்சி ஒன்றியம், வானூர்.

6.8.2020

பெறுதல் :
திருமதி. R.பச்சையம்மாள்,
க/பெ. ரங்கநாதன்,
2/221, மயிலம் ரோடு,
திருச்சிற்றம்பலம்.

நகல் : உதவி இயக்குநர்(நகர் ஊரமைப்பு)விழுப்புரம் அவர்களுக்குத் தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் : உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), விழுப்புரம் அவர்களுக்குத் தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் : சார்பதிவாளர், இணை எண் 1 சார்பதிவாளர் அலுவலகம், வானூர் அவர்களுக்குத் தகவலுக்காக.

நகல் : மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (மண்டலம்—1), ஊராட்சி ஒன்றியம், வானூர்.

நகல் : ஊராட்சி செயலாளர், திருச்சிற்றம்பலம் ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், வானூர்.

நகல் : ஆ2 பிரிவு கோப்பிற்கு.

D:\NOC\ sub-division-3%



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate